தொலைத் தொடர்பு தோழன்

THOLAI THODARBU THOZHAN - Tamil Monthly

மலர் - 2 VOLUME - 2	இதழ் - 5 ISSUE - 5	டிசம்பர் - 2016 DECEMBER - 2016	விலை ரூ.5/- Rs. 5/-



"சுரண்டுபவர்களுக்கு எதிரான
சுரண்டப்படுபவர்களின் சர்வாதிகாரமே புரட்சி"

- காஸ்ட்ரோ

புரட்சி நாயகன் பிடல் காஸ்ட்ரோ மறைந்தார்

உலக தொழிலாளி வர்க்கத்தின் இதயத்துடிப்பாக இருந்த தோழர் பிடல் காஸ்ட்ரோ நவம்பர் 25 அன்று இரவு காலமானார். 1926 ஆகஸ்டு 23 அன்று ஒரு கரும்பு விவசாயியின் மகனாக பிறந்து தென்னமரிக்கா நாட்டு மக்களை ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக செயல்பட்டு வந்த பாடிஸ்டா அரசாங்கத்தை வீழ்த்தி சுமார் அரை நூற்றாண்டு காலத்திற்கு க்யூபா நாட்டின் தலைவராக இருந்த தோழர் பிடல் காஸ்ட்ரோ முதுமை காரணமாக மறைந்தார் என்ற செய்தி உலக நாட்டு மக்களை பெருந்துயரத்திற்கு ஆளாக்கியுள்ளது.

கல்லூரி காலத்திலேயே மார்க்சிய தத்துவத்திற்கு தன்னை ஆளாக்கிக் கொண்டு க்யூபா மக்களை வாட்டி வதைத்த பாடிஸ்டாவின் அரசாங்கத்திற்கு எதிராக செயல்பட்டதற்காக 1953 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அப்போது அவர் ராணுவ நீதிமன்றத்தில் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' என்று ஆற்றிய வீர உரை நிகழ்த்தினார். அந்த உரை இன்றும் வாழும் புரட்சியாளர்களுக்கு உத்வேகமூட்டக்கூடிய உரையாகும்.



சிறை வாழ்க்கை முடிந்த பின்னர் அவர் கொலம்பியா நாடு சென்று உலக இளைஞர்களின் ஆதர்சன நாயகனாக திகழும் தோழர் சேகுவாரா மற்றும் தனது சகோதரர் ரால் காஸ்ட்ரோவுடன் இணைந்து வெறும் 93 பேர் கொண்ட கொரில்லா படையோடு பாடிஸ்டா அரசாங்கத்தை எதிர்த்து போரிட்டு க்யூபா மக்களை விடுதலை செய்தார். 1959 முதல் அந்நாட்டின் பிரதமராக, அதிபராக செயல்பட்டவர் தோழர் பிடல். 2008 ஆம் ஆண்டு தனது முதுமை காரணமாக தானே அந்த பொறுப்பில் இருந்து விலகி ரால் காஸ்ட்ரோவை அதிபராக்கி அரசியலில் ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.

பசியும் பிணியும் தங்களின் வாழ்வோடு ஒன்றிப்போயிருந்த க்யூபா நாடு இன்று கல்வியிலும், உணவு உற்பத்தியிலும், சுகாதாரத்திலும் தன்னிறைவு பெற்ற நாடாகவும், பெண் விடுதலையிலும், இன ஒற்றுமையிலும் உலகிற்கே எடுத்துக் காட்டும் நாடாகவும் மாறியுள்ளது என்றால் அது தோழல் பிடல் காஸ்ட்ரோ அந்நாட்டில் அமலாக்கிய சோசலிச கருத்துக்களே.

அமெரிக்க நாட்டிலிருந்து 93 மைல் தொலைவில் உள்ள க்யூபா நாட்டின் தலைவராக சோசலிச எண்ணம் கொண்டவர் ஆட்சி புரியக் கூடாது என்ற எண்ணத்தின் காரணமாக ஏகாதிபத்தியம் அவரை கொலை செய்ய 638 முறை முயற்சி செய்தது என்ற செய்தியே அவரது ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வையும், சோசலிசத்தின் மீது அவரது பிடிப்பையுமே காட்டுகிறது. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்பது வள்ளுவனின் வாக்கு என்பது அவருக்கு தெரியாவிட்டாலும், இயற்கை சீற்றத்தால் அமெரிக்கா பாதிக்கப்பட்ட போது தனது மருத்துவர்களோடு மருந்துகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொண்டு சென்று உதவினார் என்பது வரலாறு. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீதிருந்த க்யூப மக்களின் வெறுப்பை அமெரிக்க மக்களுக்கு எதிரான வெறுப்பாக அவர் மாற்றவில்லை. அமெரிக்கா அந்நாட்டுக்கு எதிராக ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் பொருளாதார தடை விதித்த போதும் உலக மக்களின் ஆதரவோடு அந்த தடையினை உறுதியோடு எதிர்கொண்டார். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்த தோழர் பிடல் தென்னமெரிக்க நாடுகளின் விடுதலை போராட்டங்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் செய்தார். அணி சேரா நாடுகளின் அமைப்பிற்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிற்கு தனது மருத்துவர் மற்றும் கல்வியாளர்களை கொடுத்து உதவி செய்தார்.

இந்திய மக்களின் நண்பனாக திகழ்ந்த தோழரின் மறைவு ஒரு சகாப்தத்தின் நிறைவு. உலகம் முழுவதும் உழைப்பாளி மக்களின் ஆட்சி மலர வேண்டும் என்கின்ற அந்த மாவீரனின் கனவை உழைக்கும் வர்க்கம் கண்டிப்பாக நிறைவேற்றும் என்று சூளுரைப்பதே தோழர் பிடலுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்ற பெருமிதத்தோடு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது கொடி தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறது. ■

BSNLஐ சீரழிக்கும் துணை டவர் நிறுவனத்தை அனுமதியோம் - டிசம்பர் 15ல் வேலை நிறுத்தம்

BSNL நிறுவனத்தில் உள்ள டவர்களை எல்லாம் தனியாக பிரித்தெடுத்து ஒரு துணை டவர் நிறுவனம் அமைப்பதாக ஒரு அமைச்சரவைக் குறிப்பு தயார் செய்யப்பட்டு அமைச்சகங்களுக்கு இடையே சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. இது BSNL நிறுவனத்தை சீரழிக்கும் முயற்சியே அன்றி வேறு ஏதும் இல்லை.

தொடர்ச்சியாக BSNL நிறுவனத்தின் வருவாய் இழப்பு அதிகரித்து வந்த நிலையில் BSNLல் பணியாற்றும் ஊழியர்களும், அதிகாரிகளும், புதிய நிர்வாகத்தின் துணையோடு அயராது பாடுபட்டு வருவாயை தொடர்ந்து தற்போது அதிகரித்து வந்து கொண்டுள்ளனர். செயல்பாட்டு நஷ்டத்தில் இருந்த நிறுவனம் தற்போது சுமார் 3800 கோடி ரூபாய்களுக்கு மேல் செயல்பாட்டு லாபம் அடைந்து வரும வேளையில் அரசு தற்போது இந்த முடிவை எடுத்துள்ளது ஒரு உள்நோக்கம் கொண்டதாகும். BSNL நிறுவனத்தின் துணை டவர் நிறுவனம் அமைக்க வேண்டிய அவசியம் என்ன? BSNL ன் பங்கு விற்பனைக்கு எதிராக ஊழியர்களும் அதிகாரிகளும் சேர்ந்து தொடர்ந்து போராடி தடுத்து வந்துள்ள காரணத்தால் கொல்லைப்புற வழியாக BSNLஐ தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியே இது. 2015 ஏப்ரல் 21 மற்றும் 22 ஆம் தேதிகளில் நாம் அனைவரும் பங்கேற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தில் நாம் வைத்த கோரிக்கைகளில் அரசின் துணை டவர் நிறுவனம் அமைக்கும் முயற்சி கைவிடப்பட வேண்டும் என்பதும் பிரதானமான கோரிக்கை.

தற்போது முழுக்க முழுக்க BSNLன் துணை நிறுவனமாகவே இருக்கும் என்ற அரசின் கூற்று ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில் அரசின் நிதி ஆயோக் தொடர்ந்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதே நோக்கமாக கொண்டு செயல்படுகின்றது. இந்த வேலையில், இந்த நிறுவனத்தின் பங்குகளை கேந்திர பங்குதாரருக்கு விற்பனை என்ற பெயரில் அதானிக்கோ அம்பானிக்கோ விற்றுவிடும் ஆபத்து உள்ளது. டவர் நிறுவனம் தனியாக பிரிக்கப்பட்டது என்றால் அதனை பயன்படுத்துவதற்கான கட்டணத்தை BSNL நிறுவனம் அதற்கு வழங்க வேண்டும். இது BSNL நிறுவனத்தை புத்தாக்கம் செய்து லாபமீட்டும் நிறுவனமாக மாற்ற வேண்டும் என்று ஊழியர்களும் அதிகாரிகளும் இணைந்து உழைத்தது எல்லாம் வீணாகிப் போகும் என்ற நிலை உருவாகும். BSNL புத்தாக்கம் பாதிக்கப்படும்.

இந்த முயற்சியை தடுத்து நிறுத்திட வேண்டும் என சங்கங்கள் இடையே இருந்த வேற்றுமை எல்லாம் களைந்து இன்று அனைத்து ஊழியர் சங்கங்களும் அதிகாரிகளின் சங்கங்களும் இணைந்து நின்றுள்ளன. அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில் கார்ப்பரேட் அலுவலகம் முதல் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் 25.11.2016 அன்று பெருந்திரள் தர்ணா போராட்டம் நடைபெற்றது. ஆனாலும் அரசாங்கம் தனது முயற்சிகளை தொடர்ந்து வருகிறது.

இதனை தடுத்து நிறுத்த வேண்டியது நமது அடிப்படைக் கடமையாகும். BSNL ஐ காப்பாற்ற நாம் மேற்கொண்டு வரும் கடுமையான முயற்சிகளை விடக் கடுமையானதொரு போராட்டம் ஒன்றே BSNLஐயும் நமது வாழ்வையும் காப்பாற்றும். இதை விட கடுமையான முடிவுகளை அரசு எடுத்த போதெல்லாம் நமது ஒன்று பட்ட போராட்டமே நம்மைக் காப்பாற்றி உள்ளது. எனவே இந்த முறையும் நாம் வெற்றி பெற்றிட BSNLல் பணியாற்றிடும் அனைத்து ஊழியர்களையும், அதிகாரிகளையும் நேரடியாக சந்தித்து விளக்கிக் கூறி இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும். இது BSNLன் ஜீவ மரணப்போராட்டம் என்பதை மனதில் கொள்வோம். நிறுவனத்தை காத்திட, நம் வாழ்வை காத்திட இந்த துணை டவர் நிறுவன முயற்சியை தடுத்து நிறுத்துவோம். டிசம்பர் 15 வேலை நிறுத்தத்தை முழு வெற்றி பெறச்செய்வோம்.

BSNLEU

உள்ளே...

பிடல் காஸ்ட்ரோ	1
புரட்சி நாயகன்.....	2
வேலை நிறுத்தம்	3
அகில இந்திய மாநாடு	4
கறுப்புப் பணம்	6
டொனால்ட் ட்ரம்ப்	9
மத்திய செயலகக் கூட்டம்	10
ஈரோடு மாவட்ட மாநாடு	12
சேலம் மாவட்ட மாநாடு	13
தர்மபுரி மாவட்ட மாநாடு	14
திருச்சி மாவட்ட மாநாடு	15
ப்ராஜக்ட் மாவட்ட மாநாடு	16
தஞ்சை மாவட்ட மாநாடு	17
சிறப்பு கருத்தரங்கள்	18
களம்கண்ட போது	19
8வது அனைத்திந்திய மாநாடு	20

சென்னையில் BSNLEUயின் 8வது அகில இந்திய மாநாடு களம் காண்போம்..... வெற்றிகரமாக்குவோம்......

BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாடு தமிழகத்தின் தலைநகரான சென்னையில் 2016, டிசம்பர் 31 முதல் 2017 ஜனவரி 3 வரை நடைபெற உள்ளது. இந்த மாநாட்டிற்கான வரவேற்புக் குழு தோழர் T.K. ரங்கராஜன் MP தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மாநாட்டிற்கு வருகை தர உள்ள மத்திய சங்க நிர்வாகிகளையும், மாநில செயலாளர்களையும், சார்பாளர் மற்றும் பார்வையாளர்களாக பங்கேற்க உள்ள அனைவரையும் தமிழ் மாநிலத்தில் உருவாக்கப்பட்டுள்ள 8வது அகில இந்திய மாநாட்டின் வரவேற்புக் குழு வருக வருக என வரவேற்கிறது.

இந்த மாநாடு நடைபெற உள்ள தமிழகத்தில் தான் இந்தியாவின் முதல் தொழிற்சங்கம் 1918 ஏப்ரலில் சென்னையில் உள்ள B&Cமில்லில் "சென்னை லேபர் யூனியன்" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. அதே போல 1923ல் இந்தியாவின் முதல் மே தின பேரணி என்பதும் சென்னையில் தான் நடைபெற்றது. இந்த இரண்டையும் முன்னின்று நடத்தியவர் தோழர் சிங்காரவேலர். தமிழக தொழிற்சங்க வரலாற்றில் தோழர் சிங்காரவேலர் அவர்களின் பங்கு மகத்தானது. தமிழகத்தில் தொழிற்சங்கங்களை உருவாக்குவதில் முன்னணி பாத்திரம் வகித்த திரு.வி.க. சர்க்கரை செட்டியார், வ.உ.சிதம்பரனார் உட்பட பலருடன் தோழர் சிங்காரவேலர் இணைந்து பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கினை ஆற்றிய மகாகவி பாரதியார், வ.உ.சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், சுப்பிரமணிய சிவா, கொடி காத்த குமரம், வாஞ்சி நாதன் ஆகியோர் இன்றும் எலரோரது நினைவிலும் நீங்கா இடம் பிடித்துள்ளனர்.

2016 டிசம்பர் 31 முதல் 2017 ஜனவரி 3 முடிய நமது 8வது அகில இந்திய மாநாடு சென்னையில் பிரசித்தி பெற்ற தேனாம்பேட்டையில் உள்ள காமாராஜ் அரங்கத்தில் நடைபெறும்.

BSNL ஊழியர் சங்கம் கடந்த இரண்டாண்டுகளில் நிறுவனத்தை பாதுகாக்கவும், ஊழியர்களின் பிரச்சனை களுக்காகவும் கம்பீரமாக வேலை நிறுத்தங்கள் நடத்தி உள்ளது. அனைத்து தொழிற் சங்கங்களையும் ஒன்றிணைத்து 2015, ஏப்ரல் 21,22 தேதிகளில் நடத்திய வேலை நிறுத்தம் மகத்தானது. இந்தக் காலக்கட்டத்தில் தான் 7 ஆண்டுகளாக BSNL ஊழியர்களுக்கு கிடைக்காமல் இருந்த PLI ஐ இந்த ஆண்டு 2014-15ஆம் ஆண்டிற்கான ரூ.3,000/- பெற்றுத்தந்துள்ளது. ஓய்வூதியத்தை பாதுகாக்க 60 சதவிகித கட்டுப்பாட்டை தகர்த்தது நமது BSNL ஊழியர் சங்கம்.

8ஆவது அகில இந்திய மாநாடு பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டிய சூழலில் நடைபெற உள்ளது. BSNL ஐ பாதுகாப்பது, மூன்றாவது ஊதிய மாற்றக் குழுவை எதிர்கொள்வது, துணை டவர் நிறுவனம் அமைப்பதை தடுப்பது. ஊழியர் பிரச்சனைகளை தீர்வு காண விவாதிப்பது, ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளில் கவனம் செலுத்துவது. ஓய்வூதியர் பிரச்சனைகள் உள்ளிட்ட அம்சங்களை விவாதித்து போராட்ட திட்டங்களை வகுக்கக் கூடிய மாநாடாகும்.

சாதனைகள் பல புரிந்து BSNL ஊழியர் சங்கத்தின் எழுச்சி மிகு எட்டாவது அகில இந்திய மாநாட்டிற்கு BSNL நிறுவனத்தின் திரு அனுபம் ஸ்ரீவஸ்தா (DIRECTOR (HR)) திருமிகு சுஜாதாரே உள்ளிட்ட அதிகாரிகளும், CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் பத்மநாபன் உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்களும், BSNL ல் உள்ள அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்க தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். ●

தேசியக் குழுவை (NATIONAL COUNCIL) அமைத்திடுக

சரிபார்ப்பு தேர்தல் நடந்து பல மாதங்கள் கழிந்த பின்னரும் இதுவரை தேசியக் குழு அமைக்கப்பட வில்லை. இது போன்று இதற்கு முன்னர் நடந்ததில்லை. உடனடியாக அமைக்குமாறு தலைமையக மனித வள இயக்குனருக்கு நமது சங்கத்தின் சார்பில் ஏற்கனவே கடிதம் எழுதியிருந்தோம். இது சம்பந்தமாக GM (SR) அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தப்பட்டது. இரண்டாவது சங்கம் தேசியக் குழுவிற்கான உறுப்பினர் பட்டியலை இதுவரை நிர்வாகத்திற்கு அளிக்காததால் தேசியக்குழு அமைக்கவில்லை என்று நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது.

சென்னையிலேயே ஒரு போராட்டக் களம்

சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ளது தமிழ் மாநில முதன்மை பொது மேலாளர் அலுவலகம். சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பில் 7 மாடி கட்டிடம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. பல்லாயிரம் அடி சதுரபரப்பில் திறந்த வெளி. இதில் ஏராளமான அதிகாரிகளும், ஊழியர்களும் பணி புரிகின்றனர். இங்கே துப்புறவு மற்றும் சுத்தம் செய்யும் பணிக்கு மதுரையைச் சேர்ந்த CLEAN AND CARE என்ற நிறுவனம் குத்தகைக்கு எடுத்து இருந்தது. 10 பெண் ஊழியர்கள் உடபட மொத்தம் 11 ஊழியர்கள் மிக மிக அற்ப சம்பளத்தில் பல்லாண்டுகளாக பணி செய்து வருகின்றனர். பல ஒப்பந்தகாரர்கள் மாறிய பின்பும் அவர்கள் பணியில் தொடர்ந்து வந்தார்கள்.

இந்த நிலையில் 30.09.2016ல் பழைய ஒப்பந்தகாரர் மாறி புதிதாக 01.10.2016 முதல் பெங்களூரைச் சேர்ந்த புதிய நிறுவனம் ஒப்பந்தப் பணியை மேற்கொண்டது. பல ஆண்டுகள் பணிபுரிந்த ஒப்பந்த தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக புதிய ஒப்பந்த தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தியது. பல்லாண்டுகளாகப் பணி புரிந்த பழைய ஒப்பந்த தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நமது தொழிற்சங்கத்தின் வேண்டுகோளை புதிய ஒப்பந்தகாரர் மறுத்து விட்டார். மேலும் ஒப்பந்த தொழிலாளர்கள் யாரை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒப்பந்தகாரர்தான் தீர்மானிப்பார் என்பதும் அதில் ஊழியர் சங்கம் உட்பட யாரும் தலையிடக் கூடாது என்று புதிய ஒப்பந்தகாரர் அதிகாரத்துடன் தெரிவித்தார். மாநில நிர்வாகமும் அந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தகாரருடன் இணைந்து வேலையை மறுத்தது. பல்லாண்டுகளாக பணி செய்தவர்களை தெருவில் நிறுத்தியது.

வேலை மறுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கேட்டு BSNL ஊழியர் சங்கமும், தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் போராட்டப்பாதையில் இறங்கின. தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள், மாலை நேர தர்ணா போராட்டங்கள் நடத்தப்பட்டன. 16.11.2016 முதல் சென்னையில் CGM அலுவலக மாவட்ட சங்கம் தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டது.

இந்தக் கால கட்டத்தில் ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சனை சம்பந்தமாக எந்த தொழிற்சங்கத்திற்கும் பேச்சு வார்த்தை நடத்தும் உரிமை கிடையாது என்று ஆணவத்துடன் BSNL தலைமையகம் உத்தரவிட்டது.

பிரச்சனை தீர்வடையாத நிலையினைக் கண்ட ஊழியர் சங்கம் மற்றும் ஒப்பந்த ஊழியர் சங்கம் ஒன்றினைந்து 18.11.2016 அன்று மாநில அலுவலகம் முன்பு பெருந்திரள் முறையீடு என்று முடிவு செய்தது.

இதனிடையில் மத்திய தொழிலாளர் நல இலாக்காவை சார்ந்த அதிகாரிகள் சமரச பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதிலும் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. தொடர்ந்து வேலை உத்தரவாதம கிடையாது என்றும், யாருக்கு வேலை அளிக்க வேண்டும் என்ற உரிமை ஒப்பந்தகாரருக்கு மட்டுமே உண்டு என்று தொழிலாளர் நல அதிகாரிகளும் தெரிவித்து விட்டனர். எனவே வேலை மறுக்கப்பட்ட 11 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை என்பது மிகவும் முக்கியமான தலையான பிரச்சனையாக உருவெடுத்தது. கொள்கைப் போராட்டமாக மாறியது. BSNL அதிகாரிகளும், தொழிலாளர் துறை அதிகாரிகளும் கைவிட்ட பிறகு தீவிரமான போராட்டம் மூலமாக தீர்வு என்ற முடிவுக்கு இரண்டு சங்கங்களும் வந்தன.

எனவே தமிழ்நாடு முழுவதும் 17 தொலை தொடர்பு மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான நிரந்தர ஊழியர்களையும் ஒப்பந்த தொழிலாளர்களையும் திரட்டுவது என்றும் தீவிரமான போராட்டம் மூலம் தீர்வு காண்பது என்ற முடிவை கறாராக அமுல்படுத்தின. போராட்ட அறை கூவலை ஏற்று அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஒப்பந்த தொழிலாளர்களும் நிரந்தர ஊழியர்களும் பல்வேறு வாகனங்கள் மூலம் மாநில அலுவலகம் நோக்கி அணி அணியாக திரண்டு வந்தனர். ஏறக்குறைய 2000 ஊழியர்கள் திரண்டு வரும் பொழுது அலுவலகத்தில் உள்ளே நுழைய விடாமல் வாசலிலே போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். முதற் கட்ட பேச்சு வார்த்தை காவல் துறை அதிகாரிகளுடன் நடத்தப்பட்டது. நமது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்த காவல் துறை அதிகாரிகள் பூட்டிய கதவை திறந்து செல்ல அனுமதித்தனர். பூட்டிய கதவு திறந்து

உற்சாகத்தில அலுவலக வளாகத்தில் உள்ளே நுழைந்த ஊழியர்கள் மிகவும்கட்டுப்பாட்டுடனும், அமைதியுடனும், அலுவலக வேலைக்கு எந்த பாதிப்பும் இல்லாமல், யாருக்கும் இடையூறும் செய்யாமல் போராட்டத்தை துவங்கினர்.

BSNL ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் S.செல்லப்பா ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் தோழர் M. முருகையா கூட்டுத் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. ஒப்பந்த தொழிலாளர் சங்கத்தின் அகில இந்திய துணைச் செயலாளர் C.பழனிச்சாமி, மாநிலச் செயலாளர் C. வினோத்குமார், ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் A. பாபுராதாகிருஷ்ணன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். மேலும் சென்னை தொலைபேசி ஊழியர் சங்கத் தலைவர் தோழர் கன்னியப்பன், மாநில செயலாளர் கோவிந்தராஜு, தமிழ் மாநிலச் சங்க நிர்வாகிகள் தோழியர் T. பிரேமா, C. செல்வின் சத்தியராஜ், சுப்பிரமணியம், AIBDPA மாநிலச் செயலர் தோழர் C.K. நரசிம்மன், S. மாணிக்கமூர்த்தி, S.நடராஜா, BSNL CCWF அகில இந்திய உதவி செயலர் தோழர் காசி மற்றும் அனைத்து மாவட்டச் செயலர்களும் போராட்டத்தை வாழ்த்திப் பேசினர். அதிலும் குறிப்பாக NFTE சங்கத்தின் மாநில தலைவர் தோழர் காமராஜ், மேலும் அதிகாரிகள் சங்கத்தைச் சார்ந்த தலைவர்கள் தோழர் வரதராஜன் (AIBSNLEA) ராஜசேகரன் (SNEA) ஆகியோரும் வாழ்த்திப் பேசினர்.

ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சனைகளை பேசவே மறுத்து வந்த மாநில நிர்வாகம் பேச்சு வார்த்தைக்கு மதியம் 2.00 மணிக்கு அழைத்தது. ஆனால் பேச்சு வார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. போராட்டம் புது வடிவம் பெற்றது. அடுத்த கட்டமாக ஊழியர் சங்கத்தைச் சார்ந்த 100 தோழர்கள் அதிகாரியின் அறைக்கு முன்பே ஒன்றிணைந்து பேச்சு வார்த்தை நடத்துவதென முடிவு செய்து சுமார் 4 மணியளவில் தொடங்கினர்.

போராட்ட கனலாக கீழே ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அமைதிகாத்து அமர்ந்திருந்தனர். பிரச்சனையில் தீர்வு காணாமல் ஊருக்கு திரும்புவதில்லை என்று ஊழியர்கள் உருக்கு போன்ற ஒற்றுமையுடன் உறுதியாக இருந்தனர். எதுவரினும் இறுதி வரை களம் காண்போம் என்று துணிந்து நின்றனர். தலைமையின் அறை கூவலுக்கு கட்டுப்பட்டு காத்து இருந்தனர். பிரச்சனை விசுவ ரூபமெடுப்பதை புரிந்து கொண்ட அதிகாரிகள் மறுபடியும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். மாலை 05.30 மணிக்கு தலைமை பொது மேலாளரிடம் இருந்து அழைப்பு வந்தது. ஊழியர்களின் சார்பில் BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளரும், மாநில தலைவருமான தோழர் செல்லப்பா மற்றும் மாநில செயலாளர் தோழர் பாபுராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர். நிர்வாகத்தின் சார்பில் CGM திருமதி N. பூங்குழலி ITS/ GM (HR), DGM (Admn), AGM (Admn) மற்றும் EE(Civil) ஆகியோர் பங்கேற்றனர். பேச்சு வார்த்தையில் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. அதன்படி வேலை மறுக்கப்பட்ட அனைத்து ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் வேலை மறுபடியும் வழங்கப்படும். மூன்று பேருக்கு மீனம்பாக்கம் அலுவலகத்திலும் மீதமுள்ள தோழர்களுக்கு அதே மாநில அலுவலகத்தில் வேலை வழங்குவதற்க் கேற்றார் போல் மறுகணக்கீடு செய்யப்பட்டு வேலை வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அடைக்கப்பட்ட பாதை மீண்டும் திறக்கப்பட்டது, வேலை மறுக்கப்பட்ட அனைவருக்கும் வேலை உறுதி செய்யப்பட்டது.

சபாஷ் தோழர் மோகன்குமார் மற்றும் வடிவேலு

BSNL ன் புத்தாக்கத்தின் ஒரு பகுதியாக நமது OUTDOOR UNIT இல் உள்ள பில்லர்களை சரி செய்ய வேண்டும் என்கின்ற நமது சங்கத்தின் அறைகூவலை ஏற்று கோவை மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் முன்னணி தோழர் மோகன் குமார் மற்றும் TNTCWU மாவட்ட தலைவர் தோழர் வடிவேலு அவர்களும் தங்கள் பகுதியில் உள்ள பில்லரை மிகச் சிறப்பாக மாற்றி அமைத்துள்ளனர். அவர்கள் இருவரின் பணியையும் தமிழ் மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது.

கறுப்புப் பணம் ஒழிய வேண்டும்

8.11.2016 அன்று இரவு பாரத பிரதமர் மோடி அவர்கள் தற்போது புழக்கத்தில் இருந்து வரும் 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் நள்ளிரவு முதல் செல்லாது என்று அறிவித்தார். நாட்டில் கருப்புப் பணத்தையும் கள்ளப் பணத்தையும் ஒழிப்பதற்காகவும், தீவிரவாதிகளின் பணப் பரிமாற்றத்தை தடுப்பதற்காகவும் லஞ்சத்தை ஒழிப்பதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு இது போல 1000, 500, 10,000 ரூபாய்கள் தடை செய்யப்பட்டது. ஆனால் 38 ஆண்டுகள் ஆன பின்பு தற்போது பல லட்சக்கணக்கான கோடி ரூபாய்கள் கருப்புப் பணம் இருப்பதாக அனைத்து தரப்பினரும் தெரிவிக்கின்றனர். யாரெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்தோமோ அவர்கள் எல்லாம் இந்த நடவடிக்கையை ஆதரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

எது எப்படியோ, அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழை, நடுத்தர, சிறு தொழில் செய்வோர், விவசாயிகள் அனைவரும் அல்லல் பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். இதுவரை சுமார் 70 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்பது மிகவும் வேதனைக்குரிய விசயம்.

பலன் கிடைக்குமா?

நம் நாட்டில் உள்ள கறுப்புப்பணம் குறித்து உலக வங்கியின் புள்ளிவிவரங்கள் எனன சொல்கின்றன? மொத்த இந்தியப் பொருளாதாரத்தில் சுமார் 21 சதவீதம் அதாவது சரியாக 20.7 சதவீதம். கறுப்புப் பணம் இருப்பதாக அது சொல்கிறது. அதாவது நம் பொருளாதாரத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கும் அதிகமாக கறுப்புப் பணம் இருக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். இது ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த கறுப்புப் பணம் எங்கே இருக்கிறது? கறுப்புப் பணத்தில 6 சதவீதம் மட்டுமே ரூபாய் நோட்டுகளாக இருக்கிறது. கறுப்புப் பண பேர்வழிகள் எவரும் கருமிகள் அல்ல. அவர்கள் தங்கள் கறுப்புப் பணத்தை தலையணைக்குக் கீழே பதுக்கி வைத்துக் கொள்ளவில்லை. அதை அவர்கள் சுற்றுக்கு விட்டிருக்கிறார்கள். அதன் மூலம் அவர்களுக்கு மேலும் மேலும் அதிக அளவில் கறுப்புப் பணத்தை அது கொண்டு வரும். அவர்களின் கறுப்புப் பணம், ரியல் எஸ்டேட்டில் இருக்கிறது. மிகப் பெரிய அளவிலான கறுப்பு பணம் முதலீடுகளாக, அசையா சொத்துக்களாக, பினாமிகளின் சேமிப்புகளாக உள்ளன. இப்போது 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று சொன்னபிறகு, அவை, தங்க நாணயங்களாகவும் மாறிவிட்டன. கடந்த நான்கு நாட்களில் மட்டும் ஏராளமாக தங்கம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு மதிப்பீட்டின்படி தங்க இறக்குமதி மும்மடங்காக ஆகியிருக்கிறது.

வெளி நாட்டில் உள்ள கறுப்பு பணம் எங்கே?

இதே பிரதமர்தான் கறுப்புப் பணம் குறித்து முன்பு நாட்டு மக்களிடையே பேசுகையில், கறுப்புப் பணத்தில் 90 சதவீதம் வெளிநாடுகளில் இருக்கிறது என்றார். 2014 தேர்தலின் போது இதை குறிப்பிட்ட அவர், வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தையெல்லாம் கொண்டு வந்து, நாடடு மக்கள் ஒவ்வொருவரது வங்கிக் கணக்கிலும் தலா 15 லட்சம் ரூபாய் டெபாசிட் செய்யப்படும் என்று உறுதிமொழிமையை அளித்தார்.

எங்கே போனது அந்த உறுதிமொழி? இப்போது ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று அறிவித்தால் அந்தப் பணம் எல்லாம் திரும்பி வந்துவிடுமா? சுவிஸ் வங்கி அதிகாரிகள், தங்களிடம் யார் யார் பணம் டெபாசிட் செய்திருக்கிறார்கள் என்ற பட்டியலை இந்திய அரசாங்கத்திடம் அளித்துவிட்டதாக கூறுகிறார்கள். நமது நிதி அமைச்சரோ, சட்டப் பிரச்சனைகள் காரணமாக அவர்களின் பெயர்களை வெளியிட முடியாது என்கிறார். மொரீஷியஸ் பாதை குறித்தும், சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் உங்களுக்கும் நமக்கும் தெரியும். நம் நாட்டின் கறுப்புப் பணத்தில் பாதிக்கும் மேலாக அவர்களிடம் தான் இருக்கிறது.

அவற்றைக் கொண்டு வருவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்த முடியாது. மொத்தமுள்ள கறுப்புப் பணத்தில் 5 அல்லது 6 சதவீதம் வேண்டுமானால் இருப்பாக இருக்கலாம். ஆனால் பெரும்பகுதி இயங்கிக்கொண்டே, சுழன்று கொண்டே இருக்கிறது. அதனை தடுத்து நிறுத்திவிடவில்லை. அதனைத் தடுத்து நிறுத்தாமல் கறுப்புப் பணத்தை நிறுத்திவிட

முடியாது. எனவே பிரதமர் கூறியவற்றில் உள்ள முதல் நோக்கம் நிறைவேற்றப் படவில்லை.

கள்ள நோட்டு எங்கே இருக்கிறது?

இரண்டாவது நோக்கம், கள்ள நோட்டுகள் (Counterfeit notes) குறித்ததாகும். கொல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளியியல் கல்வி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி நாட்டில் புழக்கத்தில் உள்ள 1,418 லட்சம் கோடி ரூபாயில் வெறும் 0.028 சதவீதம் அல்லது 400 கோடி ரூபாய்தான் கள்ள நோட்டுகள் ஆகும். இதனை நிதி அமைச்சரும் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார்.

அடுத்து, இப்போது வெளியிட்டுள்ள 2000 ரூபாய் நோட்டுக்கு கள்ள நோட்டு வராது என்று என்ன உத்தரவாதம்? நாம் ஏற்கனவே பெங்களூரில் கள்ள 2000 ரூபாய் நோட்டை பார்த்து விட்டோம். கள்ள நோட்டு ஒழிக்கப்பட வேண்டியது தேவை. கள்ள நோட்டு அடிக்கப்படுவதை நிறுத்த வேண்டும். இனி எவரும் அவ்வாறு கள்ள நோட்டு அடிக்காதவாறு கடும் தண்டனை விதிக்கப்படவேண்டும். ஆனால் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இது வழி அல்ல.

பயங்கரவாதிகளுக்கு நிதி செல்வது தடுக்கப் பட்டுவிடுமா?

மூன்றாவதாக பிரதமர் கூறுவது, இதன் மூலம் பயங்கரவாதிகளுக்கு நிதி அளிப்பது தடுத்து நிறுத்தப்படும் என்பதாகும். இவற்றில் அதிகமான அளவிற்கு எலக்ட்ரானிக் டிரான்ஸ்பர் (இணைய வழி பணிப்பரிமாற்றம்) மூலமாகத்தான் வருகிறது... மும்பை, தாஜ் ஓட்டலில் வந்து தங்கியிருந்த பயங்கரவாதிகள் எவரும் சாக்குமூட்டைகளில் பணத்துடன் வந்து அதைச் செய்திடவில்லை. எனவே, ரூபாய் நோட்டை செல்லாது என்று சொன்னால் பயங்கரவாதிகளை ஒடுக்கிவிடலாம் என்று கூறுவது முட்டாள்தனம்.

பயங்கரவாதிகளுக்குப் பணம் வருவது நிறுத்தப்பட வேண்டும் என்றால் இணையவழி பணப் பரிமாற்றத்தை நிறுத்திட வேண்டும். உலகில் பல நாடுகள் இதனைச் செய்திருக்கின்றன. பயங்கரவாதிகளுக்குப் பணம் வருவதைத் தடுத்திடுவது தொடர்பாக ஐ.நா. சாசனம் மற்றும் தீர்மானங்கள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்ற வேண்டும். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, இதுவா வழி?

லஞ்சம், ஊழல், யார் பொறுப்பு?

500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று அறிவித்துவிட்டால், லஞ்ச ஊழல் ஒழிந்துவிடாது. இப்போது வெளியாகியுள்ள 2000 ரூபாய் நோட்டு மூலம் இது இரட்டிப்பாகிவிடும்.. கார்ப்பரோட்டுகளின் கணக்குகளை ஆராய்வோமானால், அவர்கள் பெரிய அளவில் கமிஷன்கள் கொடுத்திருப்பதை சேவைக் கட்டணம் என்றுதான் குறித்திருப்பார்கள். ஓர் ஏழை பத்து ரூபாய் கொடுத்தால் யாருக்காவது கொடுத்தால் அது லஞ்சம். அவர்களைக் கையும் களவுமாகப் பிடிப்பார்கள். ஆனால் பெரிய மீன்கள் - பெரிய கார்ப்பரேட்டுகள் - இங்குள்ள பெரிய கட்சிகளுக்கு, கொடுப்பதற்கு என்ன பெயர்? அவ்வாறு கார்ப்பரேட்டுகள், பெரிய கட்சிகளுக்குக் கொடுப்பதை நிறுத்தாமல் இந்த நாட்டில் எப்படி லஞ்சத்தை தடுத்திட முடியும்? அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் கார்ப்பரேட் கம்பெனிகள் நிதி கொடுப்பது நிறுத்தப்பட வேண்டும். கார்ப்பரேட்டுகள் அரசியல் கட்சிகளுக்குப் பணம் தருவது என்பது அவர்களைப் பொறுத்தவரை ஒரு முதலீடாகும். உண்மையில் லஞ்சமாகும்....

எனவே, ரூபாய் நோட்டுகளை செல்லாது என்று பிரதமர் அறிவித்ததற்கான நான்கு காரணங்களுமே இதனால் நிறைவேறப் போவதில்லை. மக்கள்தான் திண்டாடி கொண்டும் உயிரிழந்தும் கொண்டு இருக்கிறார்கள். ஆட்சியாளர்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் விரைவில் வரும். ●

தோழர் V. குமார் விழுப்புரம் காலமானார்



BSNL ஊழியர் சங்கத்தின் கடலூர் மாவட்ட பொருளாளர் தோழர் V. குமார் 27.11.2016 அன்று உடல் நலக் குறைவால் காலமானார். T3 மாவட்ட செயலாளர் மற்றும் கிளைச் சங்க, மாவட்ட சங்க பொறுப்புகள் பலவற்றை ஏற்று திறம்பட செயல்பட்டவர். அவருக்கு மனைவியும், இரண்டு மகள்களும் உள்ளனர். அவரது இழப்பு நமது கடலூர் மாவட்ட சங்கத்திற்கும், குடும்பத்திற்கும் பேரிழப்பாகும். அவரது மறைவிற்கு தமிழ் மாநிலச் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்குகிறது.

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப்

பல்வேறு பத்திரிக்கைகள் வெளியிட்ட கருத்துக் கணிப்புகளும் அமெரிக்காவின் அதிபர் தேர்தலில் ஹிலாரி கிளின்டன் வெற்றி பெறுவார் என பரவலாக தெரிவித்து வந்த நிலையில் ஜனநாயக கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றுள்ளார். அதனால் அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் பதட்டத்தில் உள்ளனராம். இது இரண்டுக்கும் தொடர்பு உண்டா? இல்லையா? பெரும் பணக்கார நிறுவனங்கள் தான் பத்திரிக்கைகளுக்கும் அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் என்று சொல்லப்படுபவர்களுக்கும் முதலாளிகள்.

நம்மால் முடியும் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பராக் ஒபாமாவினாலேயே அமெரிக்க பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பெரு முதலாளித்துவ ஆதரவு கொள்கைகளால் அமெரிக்காவில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்தது. தங்களின் லாபத்தை பெருக்கிக் கொள்ள அமெரிக்க முதலாளிகள் தங்களின் பணிகளை OUTSOURCE என்ற பெயரில் சீனா, மெக்சிகோ, இந்தியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளில் செய்து வந்தனர். இந்த வேலைகளை எல்லாம் மீண்டும் அமெரிக்கர்களுக்கே திரும்ப கிடைக்கச் செய்வேன் என்று டொனால்ட் ட்ரம்ப் வாக்குறுதி கொடுத்தார். இதன் காரணமாகவே பெரும்பான்மையான வெள்ளை தொழிலாளர்கள் ட்ரம்புக்கு வாக்களித்தனர் என்று இன்றைய செய்தி பத்திரிக்கைகள் தெரிவித்துள்ளது.

ஆனால் இதையெல்லாம் ட்ரம்ப் செய்வாரா என்பது பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஏனெனில் நான் ஆட்சிக்கு வந்தால் அனைத்து இந்திய நாட்டு மக்களின் வங்கிக் கணக்கில் 15 லட்ச ரூபாய் போடுவேன் என்று தேர்தல் சமயத்தில் நமது பிரதமர் வாக்குறுதி அளித்ததும், அவரது வெற்றிக்குப் பின் அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியின் தலைவர் அதுதேர்தல் பிரச்சாரத்தில் சும்மா கூறியதாக கூறியதையும் நாம் கேட்டுக் கொண்டுதானே இருக்கிறோம்.

தோழர் திபன் கோஷ் காலமானார்



மத்திய அரசு ஊழியர் தொழிற்சங்க இயக்கத்தின் முது பெரும் தலைவர் தோழர் திபன் கோஷ் 13.11.2016 அனறு கொல்கத்தாவில் காலமானார். மேற்கு வங்க மாநில மத்திய அரசு ஊழியர் மகாசம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் பல பத்தாண்டுகள் செயல்பட்டவர். அகில இந்திய பாதுகாப்புத் துறை ஊழியர் சம்மேளனத்தின் துணைத்தலைவராகவும் பணியாற்றியவர். வரலாற்று சிறப்பு மிக்க 1974 ரயில்வே ஊழியர் போராட்டத்தில் தீவிரப் பணியாற்றிய காரணத்தால் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அதற்காக பணி நீக்கமும் செய்யப்பட்டார். அத்துடன் 19 மாத காலம் சிறையிலும் அடைக்கப்பட்டார். பின்னர் நீதி மன்ற உத்தரவின் மூலமாக பணியில் சேர்ந்தார். இரண்டு முறை மேற்கு வங்கத்தில் இருந்த நாடாளுமன்ற மேலவைக்கு தேர்வு செய்யப்பட்ட அவர் அங்கும் உழைக்கும் மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி வாதாடினார். நமது மத்திய சங்கத்திற்கு அவ்வப்போது நல்ல பல ஆலோசனைகளையும் வழங்கியவர். தோழர் திபன் கோஷின் மறைவிற்கு தமிழ் மாநிலச் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்குகிறது.

திரு. பாலமுரளி கிருஷ்ணா மறைந்தார்

பிரபல கர்நாடக இசைக்கலைஞரும், பாடகரும், நடிகருமான சங்கீத கலாநிதி திரு. பாலமுரளி கிருஷ்ணா நவம்பர் 22 ஆம் தேதி சென்னையில் காலமானார். ஆந்திர மாநிலம் சங்கர குப்தாவில் பிறந்த அவர் தனது 6ஆவது வயதில் துவக்கிய தனது கலைப்பயணத்தை இறுதி மூச்சு வரை தொடர்ந்தார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட பல திரைப்படங்களிலும் தனது முத்திரையை பதித்தவர் இவர். பாலமுரளி கிருஷ்ணா பாடிய ‘ஒரு நாள் போதுமா’ என திருவிளையாடல் படத்திலும் ‘சின்னக்கண்ணன் அழைக்கிறான்’ என கவிக்குயில் படத்திலும் பாடிய பாடல்கள் உள்ளிட்ட அவரது பாடல்கள் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவை என்றால் அது மிகையாகாது. அவர் ‘பத்ம விபூஷன்’, செவாலியே, UNESCOவால் வழங்கப்படும் மகாத்மா காந்தி விருது, சங்கீத கலாசிகாமணி உள்ளிட்ட பல பட்டங்களைப் பெற்றவர். அற்புதமான இசைக்கலைஞரின் மறைவு இசையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவிற்கு தமிழ மாநிலச் சங்கம் தனது இரங்கலை தெரிவிக்கின்றது.

சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயலகக் கூட்டம்

BSNLEU வின் செயலகக் கூட்டம் நவம்பர் 12, 13 தேதிகளில் சென்னையில் நடந்தது. விரிவான விவாதங்களுக்குப் பின்னர் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன. அனைத்து மாவட்ட செயலர்களும் இந்த முடிவுகளை அமலாக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

(1) போனஸ் ஒப்பந்தம் கொண்டாடப்பட்டது : மத்திய செயலகக் கூட்டம் போனஸ் ஒப்பந்தத்தை உயர்த்திப் பிடித்தது. ஏழாவது சரிபார்ப்பின் போது நிர்வாகம் அறிவித்த அரைகுறையான இரண்டு இலக்க போனஸையும் (2014-15 க்கானது) அதே போல் தேர்தல் முடிந்த பின் அறிவித்த ரூ.1100/- போனஸ் ஆகிய இந்த இரண்டையும் மத்திய சங்கம் சரியாக நிராகரித்ததை அந்த கூட்டம் கவனத்தில் எடுத்தது. NFTEயுடன் இணைந்து ஒற்றுமையாக அணுக சரியான தந்திரத்தை வகுத்ததையும், அது நிர்வாகத்தை நிர்பந்தப்படுத்தி ரூ. 3000/- போனஸ் வழங்கச் செய்தது. அதற்காக மத்திய சங்கத்தை மத்திய செயலகம் முழு மனதுடன் பாராட்டியது.

(2) டவர் கம்பெனி உருவாக்கும் முயற்சியை முழுபலத்துடன் எதிர்த்திடுக : BSNL ல் உள்ள அனைத்துசங்கங்கள் மற்றும்அசோசியேஷன்கள் ஏற்கனவே வெளிப்படுத்திய கடும் எதிர்ப்புகளையெல்லாம் உதாசீனப்படுத்தி விட்டு துணை டவர் கம்பெனி அமைப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு மத்திய செயலகம் ஆழ்ந்த கவலையினை வெளிப்படுத்தியது. அனைத்து சங்கங்கள் மற்றும் அசோசியேஷன்களையும் ஒன்று படுத்தி இந்த முடிவினை எதிர்க்கச் செய்ய எடுத்த முயற்சிகளுக்கு மத்தியச் சங்கத்தை மத்திய செயலகக் கூட்டம் பாராட்டியது. துணை டவர் கம்பெனியை முழுபலத்துடன் எதிர்க்க அனைத்து சங்கங்கள் மற்றும் அசோசியேஷன்களை ஒன்று திரட்டி வேலை நிறுத்தம் உட்பட அனைத்து கடுமையான போராட்ட நடவடிக்கைகளையும் இணைந்து மேற்கொள்ள மத்திய சங்கத்துக்கு மத்திய செயலகக் கூட்டம் வழிகாட்டியது. டவர் சொத்துக்களை BSNL லிடமிருந்து பறித்து அதனை பலவீனப்படுத்தும் மோடி அரசின் முயற்சிகளை தோற்கடிக்க அனைத்து ஊழியர்களையும் அந்த கூட்டம் அறைகூவி அழைக்கிறது.

(3) ஊதிய மாற்றம் : BSNLEU வினால் அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் ஊதியக் கமிட்டி அமைப்பதில் உள்ள கால தாமதத்தின் மீது செயலகக் கூட்டம் ஆழ்ந்த கவலையினை வெளிப்படுத்தியது. இது ஊழியர்களின் ஊதிய மாற்றத்தினை இறுதியாக தாமதப்படுத்தும். எனவே அனைத்து சங்கங்கள் மற்றும் அசோசியேஷன்களை ஒன்று திரட்டி ஒரு ஒன்றுபட்ட அணுகு முறையினை உருவாக்க மத்திய சங்கத்தை பணித்துள்ளது. டிசம்பர் முதல் வாரத்துக்குள் ஊதிய மாற்றத்தில் உள்ள கோரிக்கைகளை இறுதிப் படுத்த வழி காட்டியது.

(4) BSNL ன் புத்தாக்கம் : பிரதமர் உட்பட அனைத்து அரசு இயந்திரங்களும் 5-9-16ல் துவக்கப்பட்ட ரிலையன்ஸ் ஜியோவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிப்பதற்கு மத்திய செயலகக் கூட்டம் தனது ஆழ்ந்த கவலையினை வெளிப் படுத்தியுள்ளது. அரசின் இந்த ஆதரவுத் தன்மை BSNL புத்தாக்கத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தும். BSNL நிறுவனம் 4G சேவைகளைத் துவக்க ஏதுவாக மேனேஜ்மெண்ட் கமிட்டி ஏற்கனவே கோரியுள்ளபடி 700MHZ பேண்டில் உடனடியாக ஸ்பெக்ட்ரம் வழங்க வேண்டும் என செயலகம் வற்புறுத்துகிறது. "புன்னகையுடன் கூடிய சேவை" திட்டத்தைத் தீவிரப்படுத்தவும், BSNL ன் பல்வேறு திட்டங்களை பிரபலப்படுத்தவும், 10.08.2016ல் நாடு முழுவதும் வெற்றிகரமாக ஊர்வலம் ஏற்பாடு செய்ததற்கும் போரத்தை மத்திய செயலக கூட்டம் பாராட்டியது. போரத்தின் தீவிர நடவடிக்கைகளைக் கூடுதலாக்கல் ஆகியவை மூலம் BSNL ஐ மேலும் புத்தாக்கம் செய்ய வழி காட்டியுள்ளது.

(5) காண்டிராக்ட் மற்றும் காசுவல் ஊழியர் குறித்து : காண்டிராக்ட் ஊழியரின் குறைகளை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் பேசக்கூடாது என்ற கார்ப்பரேட் அலுவலகத்தின் சமீபத்திய கடிதத்திற்குச் செயலகக் கூட்டம் கடும்

ஆட்சேபணையினை தெரிவித்தது. நிர்வாகம் உடனடியாக அந்த கடிதத்தினை வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்துகிறது. ESI மற்றும் EPF போன்ற பிரச்சனை, வங்கிகளில் ஆன்லைன் அக்கவுண்ட் பேயீ செக் மூலமாக சம்பள பரிவர்த்தனை போன்றவற்றில் கார்ப்பரேட் அலுவலக உத்திரவுகள் அமலாக்காத பிரச்சனைகளை மாநில, மாவட்ட சங்கங்கள் முனைப்போடு எடுக்க வேண்டும் என செயலகக் கூட்டம் வழிகாட்டியுள்ளது. BSNLCCWF சம்மேளனம் அறிவித்துள்ள பாராளுமன்றம் நோக்கி பேரணி இயக்கத்திற்கு (22.02.2017-ல்) பெருமளவு ஊழியர்களை திரட்ட கோரியுள்ளது.

(6) Non- Executiveஊழியர்களின் பிரச்சனை களுக்கான தீர்வு : நீண்ட நாட்களாக நிலுவையிலுள்ள ஊழியர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க United Forum மேற்கொண்ட போராட்ட நடவடிக்கைகளை செயலகக் கூட்டம் பாராட்டியுள்ளது. மேலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண மத்திய சங்கம் எடுத்து வரும் தொடர் முயற்சிகளைப் பாராட்டிய செயலகக் கூட்டம், அவை தொடர வேண்டும் என வழி காட்டியுள்ளது. சில குறிப்பிட்டப் பிரச்சனைகள் தீர, தேவையானால் நீதிமன்றத்தை அணுகவும் மத்திய சங்கத்துக்கு வழி காட்டியுள்ளது.

(7) மருத்துவ செலவில் உள்ள பிரச்சனைகள்: மருத்துவ செலவுகளைத் திருப்பித் தருவதில் உள்ள பிரச்சனைகளை கூட்டம் தீவிரமாக விவாதித்தது. மருத்துவ காப்பீட்டு திட்டத்தை மாற்றாக வைத்தால் என்ன என்பதையும் விவாதித்துள்ளது. செயலகக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகள் அடிப்படையில் “மெடிகல் ரிவியூ கமிட்டியில்” விவாதிக்க மத்திய சங்கத்துக்கு செயலக கூட்டம் வழி காட்டியுள்ளது.

(8) 8வது அகில இந்திய மாநாட்டு தயாரிப்பு பணிகள்: வரவேற்புக் குழு பொதுச் செயலர் தோழர். A.பாபு ராதாகிருஷ்ணன் இது வரை நடந்த பணிகளை சுருக்கமாக சொன்னார். தோழர் S.செல்லப்பா AGS அவர்களும் எடுத்துரைத்தார். அகில இந்திய மாநாட்டை சிறப்பாக நடத்த அகில இந்திய மையம் ஏற்கனவே வழங்கியுள்ள வழிகாட்டுதல்களைச் செயலக கூட்டம் அங்கீகரித்தது. மாநில மாவட்ட சங்கங்கள் அவற்றை கறாராக அமல் படுத்த வேண்டுகோள் கொடுத்துள்ளது. மலருக்கு தேவையான விளம்பரங்களைச் சேகரிப்பதன் மூலம் வரவேற்புக் கமிட்டிக்குப் பொருளாதார ரீதியில் உதவ கோரியுள்ளது.

(9) மேற்கு வங்கத்தில் BSNLEU மீதான தாக்குதல்கள் மற்றும் பழிவாங்குதல்கள் நீக்கம் : மேற்கு வங்க மாநிலத்தில் BSNLEU மீதான தாக்குதல்கள் குறித்து இந்த கூட்டம் மிகவும் கவனமாக விவாதித்தது. மேற்கு வங்க CGM எடுத்து வரும் BSNLEU எதிர்ப்பு நிலையை இந்த கூட்டம் கண்டிப்பதோடு அவர் மீது சரியான நடவடிக்கை எடுக்க கார்ப்பரேட் நிர்வாகத்தை வலியுறுத்துகிறது. இந்த பிரச்சனையில் மத்திய சங்கம் எடுத்த நடவடிக்கைகளை பாராட்டிய செயலகக் கூட்டம், இதற்கு உடனடியாக தீர்வு காண மத்திய சங்கத்தைப் பணித்தது.

கேரள பழிவாங்குதல்களைப் பொறுத்தவரை தலைவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நிராகரித்த விசாரணை அதிகாரியின் அறிக்கையினை செயலகக் கூட்டம் வரவேற்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நிர்வாகம் தலைவர்களை அந்த குற்றத்திலிருந்து விடுவிக்கக் கோருகிறது.

கடந்த காலத்தில் தவறுதலாக வழங்கப்ப்டட அதிகப்படியான தொகையினைப் பிடித்தம் செய்யாதீர்

ஊழியர்களுக்கு கடந்த காலங்களில் தவறாக வழங்கப்பட்ட கூடுதல் தொகைகளைப் பிடிக்க தடை செய்து போடப்பட்ட DOP&T உத்தரவினை DOT Endorse செய்யவில்லை என்பதால் BSNL நிறுவனத்தில் அந்த உத்தரவு இன்னமும் அமுலாக்கப்படாமல் உள்ளது. இது தொடர்பாக DOTயில் உள்ள DDG (Estt) திரு S.K. ஜெயின் அவர்களை ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P. அபிமன்யு அவர்கள் 02.11.2016 அன்று சந்தித்து கடிதம் ஒன்றினையும் கொடுத்து ஊழியர்கள் படும் துயரங்களை எடுத்துரைத்தார். இதில் தலையிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என DDG (EStt) சாதகமாக பதிலளித்துள்ளார்.

உற்சாகமாய் நடைபெற்ற ஈரோடு மாவட்ட மாநாடு

7ஆவது சங்க அங்கீகார தேர்தலிலும் முதன்மை சங்கமாய் வெற்றி பெற்ற ஈரோடு மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் மாநாடு பவானி PS திருமண மண்டபத்தில் 300க்கும் மேற்பட்ட தோழர்களின் பங்கேற்புடன் 15, 16-11-2016 ஆகிய தினங்களில் மாவட்ட தலைவர் தோழர் S. கண்ணுச்சாமி தலைமையில் உற்சாகமாய் நடைபெற்றது. 15 ஆம் தேதி நடைபெற்ற பொருளாய்வுக்குழுவை மாநில அமைப்பு செயலாளர் தோழர் M. மணியன் துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளர் தோழர் L. பரமேஸ்வரன் முன் வைத்த செயல்பாட்டு அறிக்கையும், மாவட்ட பொருளாளர் தோழர் A. ஈஸ்வரன் முன் வைத்த வரவு செலவு அறிக்கையும் சார்பாளர்களின் விவாதத்திற்கு பின் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாநில உதவி செயலாளர் தோழர் S. சுப்பிரமணியன் நிறைவுரைக்கு பின் மாவட்ட மாநாடு தள்ளி வைக்கப்பட்டது.

16.11.2016 அன்று காலை தேசியக் கொடியினை SNEA வின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் C. பரமசிவம் ஏற்றி வைக்க, கவுந்தப்பாடிகிளைப் பொருளாளர் தோழர் C. பழனிச்சாமி நமது கொடியினை அதிர்வேட்டிற்கு இடையே ஏற்றி வைத்தார். நல்ல கலை வண்ணத்துடன் அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்ற பொது மாநாட்டில் அமைப்பு செயலாளர் தோழர் R. மணி அஞ்சலி உரை நிகழ்த்தினார். வரவேற்புக் குழுவின் பொதுச் செயலாளர் தோழர் L. பழனிச்சாமி வந்திருந்த தோழர்களை வரவேற்ற பின் மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் பொதுமாநாட்டை துவக்கி வைத்தார் L. பரமேஸ்வரன், திரு. K.S. வேங்கிடசுப்பிரமணியன் ITS, GM, BSNL ERODE மற்றும் அதிகாரிகள் உரைநிகழ்த்தினர். மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் சேவைக் கருத்தரங்கை நிறைவு செய்து உரையாற்றினார். பின்னர் “BSNL வளர்ச்சியும் நமது கடமையும்” என்ற தலைப்பில் நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S. செல்லப்பா சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில் துணை டவர் நிறுவனம் அமைப்பது என்கின்ற அரசின் முடிவு உள்ளிட்ட BSNL சந்திக்க உள்ள சவால்கள் தொடர்பாகவும், நமது சங்கம் ஆற்றிவரும் பங்கினையும் மிக சிறப்பாக எடுத்துரைத்தார். பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தோழர் S. கண்ணுச்சாமி மாவட்ட தலைவராகவும், தோழர் L. பரமேஸ்வரன் மாவட்ட செயலாளராகவும், தோழர் A. ஈஸ்வரன் மாவட்ட பொருளாளராகவும் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட பொருளாளரின் நன்றி உரையோடு மாவட்ட மாநாடு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட பொருளாளரின் நன்ற உரையோடு மாவட்ட மாநாடு உற்சாகத்துடன் நிறைவுபெற்றது. புதிய மாவட்ட சங்க நிர்வாகிகளின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் வாழ்த்துகிறது.

ஊதிய மாற்றக் குழு அமைப்பது தொடர்பாக

01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தினை விவாதிப்பதற்கான குழுவினை விரைவில் அமைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கமும், United Forumமும் தொடர்ந்து வற்புறுத்துவதுடன், 08.09.2016 அன்று தர்ணா போராட்டத்தையும், 20.09.2016 அன்று உண்ணாவிரத போராட்டத்தையும் நடத்தியுள்ளன. இந்த சூழ்நிலையில் DOT மற்றும் DPE யின் உத்தரவு இல்லாமல் இந்தக் குழுவை அமைக்க முடியாது என கார்ப்பரேட் அலுவலகம் கடிதம் ஒன்று வெளியிட்டுள்ளது. அதிகாரிகளின் ஊதிய மாற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள 3 ஆவது ஊதிய பரிந்துரைக்குழு ஒரு சில மாதங்களில் அதன் பரிந்துரைகளை வழங்க உள்ள சூழ்நிலையில் ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக பேச்சு வார்த்தைக் குழு அமைக்காதது சரியல்ல என்றும், கார்ப்பரேட் அலுவலகத்தின் இந்த நிலைபாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், விரைவில் அனைத்து ஊழியர் சங்கத்தையும் ஒன்று திரட்டி இயக்க நடத்த உள்ளதாகவும் நமது சங்கத்தின் சார்பாக தெரிவித்துள்ளோம். ஊதிய மாற்றக் குழுவினை அமைக்க வேண்டும் என்ற நமது கோரிக்கைக்கு பதிலளிக்கையில், DPE மற்றும் DOTயின் ஒப்புதல் இன்றி அமைக்க இயலாது என நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே DOTயில் உள்ள Director (PSU/-1)னிடம் கடிதம் கொடுத்து BSNL ஊழியர் சங்கம் விவாதித்துள்ளது. 03.11.2016 அன்று DPEயின் செயலாளருக்கும் நமது மத்திய சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

ஒளிமயமாய் நடை பெற்ற சேலம் மாவட்ட மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் 8வது சேலம் மாவட்ட மாநாடு மல்லசமுத்திரத்தில் உள்ள பரிமள் கிராண்ட் மஹாலில் 17.11.2016 அன்று போஸின் கோடடையாய் திகழப் போவதற்கு அத்தாட்சியாய் மாவட்ட தலைவரும் மாநில உதவி செயலாளருமான தோழர் S. தமிழ்மணி தலைமையில் ஒளிமயமாய் நடைபெற்றது. தேசியக் கொடியினை தோழர் R. வேலு DOS ஏற்றிவைக்க சங்க கொடியினை தோழர் N. கௌசல்யன் BS ஓமலூர் விண்ண திரும் முழக்கங்களுக்கு இடையே ஏற்றி வைத்தார். தோழர் S. ஹரிஹரன் ADS அஞ்சலி உரையாற்றிய பின் வரவேற்புக் குழுவின் செயலாளர் தோழர் M. ராஜலிங்கம் மற்றும் மாவட்ட செயலாளர் தோழர் E. கோபால் ஆகியோர் வந்திருந்த தோழர்களை வரவேற்றனர்.

BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S. செல்லப்பா நமது சங்கத்தின் சாதனைகளான 2014-15 ஆம் ஆண்டிற்கான PLI, ஓய்வூதியர்களுக்கான 78.2% பஞ்சப்படி இணைப்பு, ஓய்வூதியத்தில் இருந்த 60% 8வது அகில இந்திய மாநாடு பற்றியும் விளக்கி பேசி துவக்கி வைத்தார். தொழிலாளர் வர்க்கம் சந்திக்கும் சவால்களையும் அதனை எதிர் நோக்கி நாம் செயல்பட வேண்டியதின் அவசியம் பற்றியும் CITU வின் மாநில தலைவர் தோழர் A. சௌந்தர்ராஜன் Ex. MLAஅவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

பின்னர் நடைபெற்ற SWAS மற்றும் நலந்தானா திட்டம் அமுலாக்க கருத்தரங்கத்தின் சேலம் மாவட்ட PGM திரு. S. சபிஷ் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அந்தக் கருத்தரங்கினை நிறைவு செய்து மாநில செயலாளர் தோழர் A. பாபுராதகிருஷ்ணன் பேசுகையில் BSNL ன் புத்தாக்கத்திற்காக நமது சங்கம் செய்துள்ளவற்றை எடுத்துரைதத தோடு சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர்களை மீண்டும் பணிக்கு எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு நடைபெற உள்ள பெருந்திரள் முறையீடு தொடர்பாகவும் எடுத்துரைத்தார். பின்னர் தோழர் P. கிருஷ்ணன் DS, தர்மபுரி, தோழர் C. பாஸ்கர் DS TNTCWU உள்ளிட்ட தோழமை சங்க தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மதியத்திற்கு மேல் நடைபெற்ற பொருளாய்வுக் குழுவில் மாவட்ட செயலாளர் தோழர் E. கோபால் முன்வைத்த செயல்பாட்டு அறிக்கையும், மாவட்ட பொருளாளர் தோழர் C. செந்தில் குமார் முன் வைத்த வரவு செலவு அறிக்கையும் விவாதத்திற்கு பின் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தோழர் M. விஜயன் மாவட்ட தலைவராகவும், தோழர் E. கோபால் மாவட்ட செயலாளராகவும் தோழர் P. தங்கராஜ் மாவட்ட பொருளாளராகவும் கொண்ட நிர்வாகிகள் பட்டியல் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. சிறப்பாக நடைபெற்ற சேலம் மாவட்ட மாநாட்டினை வரவேற்புக் குழு பொருளாளர் தோழர் P. தங்கராஜ் நன்ற கூறி முடித்து வைத்தார். புதிய நிர்வாகிகள் பணி சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள்.

BSNL ல் VRS கிடையாது

'எக்கனாமிக்ஸ் டைம்ஸ்' பத்திரிக்கை செய்தியின் அடிப் படையில், 2016-17ல் BSNLல் பணியாற்றும் 2,09,996 ஊழியர்களில் 7% ஊழியர்கள் 2017-18ல் பணி ஓய்வு பெற உள்ளனர். RTI சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு 2017 ஏப்ரல் மாத இறுதியில் 1,96,612 ஊழியர்களே இருப்பார்கள் என பதில் கொடுக்கப்பட்டுள்ளது. ஊழியர் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கோடு கொண்டு வர முன்மொழியப்பட்ட VRS திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக BSNL CMD தெரிவித்துள்ளார்.

பெயர் மாற்றக் குழு மாற்றியமைப்பு

BSNLல் பணியாற்றும் RM, TM, Sr. TOA மற்றும் TTA கேடர்களுக்கான பெயர் மாற்றம் முழுமை பெற்றுள்ளது. இன்னும் பல கேடர்களின் பெயர் மாற்றம் நடைபெற வேண்டி உள்ளது. 7 ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு முடிந்த பின்னர் இந்தக் குழுவை மாற்றியமைக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தது. அதனடிப்படையில், BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் தோழர் P. அபிமன்யு GS, தோழர் பல்பீர் சிங் President, மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோரும், NFTE சார்பாக தோழர் சந்தேஸ்வர் சிங் மற்றும் ஜார்கண்ட் மாநில செயலாளர் தோழர் மஹாவீரர் சிங் ஆகியோரும் ஊழியர் தரப்பு உறுப்பினர்களாக உள்ளனர். நிர்வாகத்தின் சார்பில் GM(EST), GM(Rect), GM(SR) மற்றும் GM (Restg & WS& I) ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் கூட்டம் விரைவில் கூட்டப்பட வேண்டும்.

எழுச்சியூட்டிய தர்மபுரி மாவட்ட மாநாடு

KG போஸ் அணியின் பாரம்பரிய மாவட்டமான தர்மபுரி மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் 8ஆவது மாவட்ட மாநாடு 22.10.2016 அன்று ஒசூரில் உள்ள தாயப்ப கவுண்டர் திருமண மண்டபத்தில் மாவட்ட தலைவர் தோழர் D.பாஸ்கரன் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்றது. தேசியக் கொடியினை தோழியர் K.விஜயா அவர்களும், நமது சங்க கொடியினை தோழர் V.S.சந்திரன் அவர்களும் விண்ணதிரும் கோஷங்களுக்கிடையே ஏற்றி வைத்தனர். மாவட்ட உதவி செயலாளர் தோழர் A.தங்கவேல் அஞ்சலி உரை நிகழ்த்தினார். வரவேற்புக்குழுவின் செயலாளர் தோழர் G.வெங்கடேச நாயுடு அவரக்ளும், மாவட்ட செயலாளர் தோழர் P. கிருஷ்ணன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சங்க அங்கீகார தேர்தல்களில் 8 முறையும் பெரு வெற்றி பெற்றிருந்த தர்மபுரி மாவட்ட சங்கத்தின் மாநாட்டை மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். பின்னர் மாவட்ட உதவி தலைவர் தோழர் S.அழகிரிசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற சேவை மேம்பாட்டு கருத்தரங்கில் மாவட்ட செயலாளர் தோழர் P.கிருஷ்ணன், உயர்திரு P.சந்தோஷம் ITS PGM, தர்மபுரி உள்ளிட்ட அதிகாரிகளும், BSNL ஊழியர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் ஆ.பாபு ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். பொது அரங்கினில் தோழர் P.டில்லிபாபு Ex.MLA, நமது முன்னால் மாநில உதவி செயலாளர் தோழர் M.நாராயண சாமி, தோழர் C.P.ஜெயராமன் TNGEA, தோழர் B.மகேஷ் குமார் SNEA, தோழர் S.இளந்திரையன் AIBSNLEA மற்றும் தோழர் P.கஜபதி TNTCWU ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா BSNL இன்று சந்திக்கும் சவால்கள், அதனை எதிர் கொள்ள நமது சங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், ஊழியர் பிரச்சனைகள், எதிர்வரும் அகில இந்திய மாநாடு உள்ளிட்டவைகளை விரிவாக விளக்கி உரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் தோழர் P.கிருஷ்ணன் முன்வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் தோழர் N.ரமேஷ் முன்வைத்த வரவு செலவு அறிக்கையினையும் மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தோழர் D.பாஸ்கரன் தலைவராகவும், தோழர் P.கிருஷ்ணன் மாவட்ட செயலாளராகவும், தோழர் N.ரமேஷ் மாவட்ட பொருளாளராகவும் கொண்ட பட்டியல் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. துடிப்பான தர்மபுரி மாவட்ட சங்கத்தின் செயல்பாடு மென்மேலும் சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

உறுதியுடன் நடைபெற்ற வேலூர் மாவட்ட மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் 8வது மாவட்ட மாநாடு ஆரணியில் 21.10.2016 அன்று கம்பீரமாக நடைபெற்றது. வரவேற்புக் குழுவின் தலைவர் திரு. R. சந்திரன் தேசியக் கொடியை ஏற்றி வைக்க மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் விண்ண திரும் முழக்கங்களுக்கு இடையே நமது சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். தோழர் M. பாண்டியன் நெடுஞ்செழியன் அஞ்சலியுரை நிகழ்த்தினார். BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் S.M. சேகர் தலைமையில் நடைபெற்ற இந்த மாவட்ட மாநாட்டிற்கு வந்த தோழர்களை மாவட்ட செயலாளர் தோழர் C. தங்கவேலு வரவேற்றார். CITU மாவட்ட செயலாளர் தோழர் கண்ணன் மாவட்ட மாநாட்டை துவக்கி வைத்தார். 'சவால்களை சந்திப்போம்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன், திரு. P. சந்தோஷம் Sr. GM மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். தோழமை சங்க நிர்வாகிகள் தோழர் P . லோகநாதன் SNEA தோழர் B. ஜோதிசுதந்திரநாதன் A IBDPA தோழர் M. சதீஷ்குமார் TNTCWU மற்றும் தோழர் C. ஞானசேகரன் LC செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். 20 பெண்கள் உள்ளிட்ட 200க்கும் அதிகமான தோழர் பங்கேற்ற இந்த மாநாட்டில் மாவட்ட செயலாளர் தோழர் C. தங்கவேலு முன் வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் தோழர் V. பிச்சாண்டி அவர்கள் முன் வைத்த வரவு செலவு அறிக்கையினையும் மாவட்ட மாநாடு விவாதங்களுக்கு பின் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தோழர் S. சிவலிங்கம் மாவட்ட தலைவராகவும், தோழர் C. தங்கவேலு மாவட்ட செயலாளராகவும், தோழர் V. பிச்சாண்டி மாவட்ட பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் மனமார வாழ்த்துகிறது.

கம்பீரமாக நடைபெற்ற திருச்சி மாவட்ட மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் திருச்சி மாவட்ட 8 ஆவது மாநாடு திருச்சி GM(O) வளாகத்தில் 23.10.2016 அன்று மாவட்ட தலைவர் தோழர் T. தேவராஜன் தலைமையில் கம்பீரமாக நடைபெற்றது. உற்சாகமான கோஷங்களுக்கு இடையே மாவட்ட துணை தலைவர் தோழர் C. மணிமேகலை தேசியக் கொடியினையும், மாவட்ட அமைப்பு செயலாளர் தோழர் K. தியாகராஜன் சங்க கொடியினையும் ஏற்றி வைத்தனர். வந்திருந்த அனைவரையும் மாவட்ட அமைப்பு செயலாளர் தோழர் M. சேதுவரவேற்க மாவட்ட துணைத் தலைவர் தோழர் G. பாலசுப்பிரமணியன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் BSNL ஊழியர் சங்கத்தின் வளர்ச்சியையும், அது ஊழியர்களின் நலன்களுக்காகவும், BSNLன் புத்தாக்கத்திற்காகவும் எடுத்து வந்து கொண்டிருக்கும் நடவடிக்கைகளை எடுத்துரைத்து சென்னையில் நடைபெற உள்ள 8 வது அகில இந்திய மாநாட்டின் சிறப்புகளையும் கூறி மாநாட்டை துவக்கி வைத்தார். திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் S. அஸ்லாம் பாஷா முன் வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் தோழர் R. கோபி முன் வைத்த வரவு செலவு அறிக்கையினையும் மாவட்ட மாநாடு ஏற்றுக் கொண்டது. இந்த மாவட்ட மாநாட்டினை AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் P. கிருஷ்ணன் மற்றும் TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் K. விஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்துரை வணங்கினார்கள். சிறப்பாக நடைபெற்ற இந்த மாவட்ட மாநாட்டில் தோழர் T. தேவராஜ் தலைவராகவும், தோழர் S. அஸ்லாம் பாஷா செயலாளராகவும், தோழர் R. கோபி மாவட்ட பொருளாளராகவும் கொண்ட நிர்வாகிகளின் பட்டியல் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட சங்க நிர்வாகிகளின் பணிகள் சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள்.

சம வேலைக்கு சம சம்பளம் வழங்கிடு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

சம வேலைக்கு சம சம்பளம் என்ற கொள்கை தற்காலிகமாக பணிக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு ஊழியருக்கும் தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமில்லாத முறையிலும் பொருந்தக்கூடியது என்று நீதிபதிகள் J.S. கேஹர் மற்றும் S.A போப்டே ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற பெஞ்ச் 26.10.2016 அன்று தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பில் கீழ்க் கண்ட முக்கிய கருத்துக்களையும் தெரிவித்துள்ளது.

ஒரே மாதிரி வேலையிலும் பொறுப்பிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியருக்கு அதே மாதிரி வேலையிலும் பொறுப்பிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ள நிரந்தர ஊழியரை விடக் குறைவான ஊதியம் கொடுக்கக் கூடாது. மக்கள் நலன் சார்ந்த அரசில் இது கூடவே கூடாது. குறைவான சம்பளம் கொடுக்கும் நடவடிக்கை என்பது சுரண்டப்படும் அடிமைத்தனத்தை உருவாக்கும் அதிகார அடக்குமுறையின் வெளிப்பாடே ஆகும். சம வேலைக்கு சம சம்பளம் என்ற கொள்கையை இந்திய நாடு முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

ஆனால் மோடியின் தலைமையிலான அரசு இந்த தீர்ப்பின் மீது என்ன நடவடிகை எடுக்கப் போகின்றது என்பது பெரிய கேள்வியாக எழுந்துள்ளது? குறைந்த அற்ப சம்பளத்திற்கு இந்திய நாட்டு தொழிலாளர்கள் தயாராக உள்ளனர். எனவே இந்தியாவில் தொழில் துவங்க வாருங்கள் என்று உலக முதலாளிகளுக்கு அழைப்பு விடும் மோடி அரசு இந்த தீர்ப்பை அமுல்படுத்துமா? இந்திய நாட்டு தொழிலாளர் நலச் சட்டங்களையே முதலாளிகளுக்கு ஆதரவாக திருத்த முயற்சி செய்து கொண்டிருக்கும்மோடி அரசு சம வேலைக்கு சம சம்பளம் வழங்கிடுமா? உச்ச நீதி மன்றத்தின் உன்னதத் தீர்ப்பை அமுல்படுத்துமா?

தீர்ப்பை அமலபடுத்த தொழிலாளி வர்க்கத்தை ஒன்றுபடுத்துவோம்! ஒன்றுபட்டு போராடுவோம்! இதைத் தவிர வேறு மார்க்கமில்லை!

200 ரூபாய் சிம் கார்டில் Off - Net வசதி உடனே வழங்க வலியுறுத்தல்

பரிட்சார்த்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு வழங்கப்பட்ட OFF - Net வசதியினை நீட்டிக்க வேண்டும் என ஏற்கனவே BSNL ஊழியர் சங்கம் DIRECTR (HR) அவர்களிடம் வலியுறுத்தி இருந்தது. மாநிலங்களில் இருந்து கார்ப்பரேட் அலுவலகம், சில தகவல்கள் கேட்டிருந்த காரணத்தால் அது காலதாமதம் ஆகும் என ஏற்கனவே BSNL ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டி இருந்தது. இது தொடர்பாக நமது மத்திய சங்கம் 04.11.2016 அன்று GM(Admn)அவர்களை சந்தித்து விவாதித்துள்ளது. விரைவில் அதற்கான உத்தரவை வெளியிடுவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

உற்சாக மூட்டிய ப்ராஜக்ட் மாவட்ட மாநாடு

7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற மகிழ்வுடன் BSNL ஊழியர் சங்கத்தின் ப்ராஜக்ட் மாவட்ட 8வது மாநாடு மாவட்ட துணை தலைவர் வளையாபதி அவர்களின் தலைமையில் 15.11.2016 அன்று சென்னை CGM (P) அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. உற்சாகமாக நடைபெற்ற இந்த மாவட்ட மாநாட்டினை மாநில பொருளாளர் தோழர் K. சீனிவாசன் BSNL ஊழியர் சங்கத்தின் சாதனைகளை விளக்கி கூறி துவக்கிவைத்தார். தோழர் S. அன்புமணி DS CGM(O), தோழர் செல்வராஜ் DS SNEA , தோழர் R. ராஜசேகர் CS SNEA உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் தனது சிறப்புரையில் PLI ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு உள்ளிட்ட சாதனைகளையும், சென்னையில் டிசம்பர் 31 முதல் ஜனவரி 3 வரை நடைபெற உள்ள 8வது அகில இந்திய மாநாட்டின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார். பின்னர் மாவட்ட செயலாளர் தோழர் S.K. புருஷோத்தமன் முன் வைத்த செயல்பாட்டு அறிக்கையினையும், மாவட்ட செயலாளர் தோழர் நாராயணா முன்வைத்த வரவு செலவு அறிக்கையினையும் மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அதற்கு பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் தோழர் வளையாபதி தலைவராகவும், தோழர் S.K. புருஷோத்தமன் மாவட்ட செயலாளராகவும் தோழர் சத்ய நாராயணா பொருளாளராகவும் கொண்ட நிர்வாகிகள் பட்டியல் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய மாவட்ட நிர்வாகிகள் திறம்பட செயல்பட தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றம் தொடர்பாக DOT செயலாளருக்கு கடிதம்

BSNL ஓய்வூதியர்களின் ஓய்வூதிய மாற்றத்திற்கான நிரந்தர தீர்விற்காக BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது. இந்த பிரச்சனை FORUM மூலமாக எடுக்கப்பட்டு, ஏப்ரல் 21 மற்றும் 22 ஆம் தேதிகளில் நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்திற்குப் பின் DOT செயலாளருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் விவாதிக்கப்பட்டது. அப்போது அவர் 01.01.2017ல் நடைபெற உள்ள ஊதிய மாற்றத்தின் போது ஊதிய மாற்றக் குழுவிற்கு இது தொடர்பாக விவாதிக்க பரிந்துரைக்கப்படும் என்று உறுதி கூறினார். ஆனால் 3வது ஊதிய மாற்றக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டவற்றில் இந்த விஷயம் இல்லை. அரசு பரிந்துரைத்ததில் இந்த பிரச்சனை இல்லாத காரணத்தால் BSNL ஓய்வூதியதாரர்களின் மாற்றம் தொடர்பான தாங்கள் எந்த ஒரு பரிந்துரையும் செய்யப்போவதில்லை என 3வது ஊதிய மாற்றக் குழு தெரிவித்துள்ளது. எனவே இந்த பிரச்சனையை அரசின் பரிந்துரையில் (TERMS OF REFERENCE) இணைக்கக்கோரி DOT செயலாளருக்கு BSNL ஊழியர் சங்கம் கடிதம் எழுதியுள்ளது.

RLC யின் சமரச பேச்சு வார்த்தை

ஊழியர்களின் தேங்கியிருக்கும் பிரச்சனைகளுக்காக 08.09.2016 அன்று நாடு தழுவிய தர்னா போராட்டங்களும், 20.09.2016 அன்று உண்ணாவிரத போராட்டங்களும் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கான கொடுத்த அறிவிப்பின் அடிப்படையில் REGIONAL LABOUR COMMISSIONER (CENTRAL) பேச்சுவார்த்தையை துவங்கினார். கடைசிக் கூட்டம் 22.11.2016 அன்று நடைபெற்றது. BSNL நிர்வாகம் தேவையற்ற கால தாமதம் செய்து கொண்டிருப்பதாக நமது சார்பில் தெரிவிக்கப்பட்டது. DPE யிடமிருந்து உரிய வழிகாட்டுதல் வராததால், கமிட்டி அமைக்க முடியவில்லை என்று நிர்வாகம் பதில் கொடுத்திருந்தது. பேச்சு வார்த்தை துவங்குவதற்கு மட்டும் DPE ஒப்புதல் தேவை, ஆனால் கமிட்டி அமைப்பதற்கு தேவையில்லை என்று நமது சங்கம் தெளிவுபடுத்தியது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட RLC அவர்கள் தொலைத் தொடர்பு இலாக்காவிற்கு தானே கடிதம் எழுதுவதாக கூறியுள்ளார். மற்ற பிரச்சனைகள் மீது இரு தரப்பு அடங்கிய கூட்டுக்குழு அமைக்கலாம் என்ற அவரது ஆலோசனையை நமது சங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. நிர்வாகம் கலந்து ஆலோசித்து பதில் சொல்வதாக தெரிவித்துள்ளது.

உற்சாகமாக நடைபெற்ற தஞ்சை மாவட்ட மாநாடு

தஞ்சை மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் 8வது மாநாடு திருத்துறைப் பூண்டி வர்த்தகர் சங்க கட்டிடத்தில் 25.11.2016 அன்று உற்சாகமாக நடைபெற்றது. தஞ்சை மாவட்ட தலைவர் தோழர் A. இருதயராஜ் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் மூத்த தோழர் நாகராஜன் தேசியக் கொடியையும், மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் சங்கக் கொடியினையும் ஏற்றிவைத்தனர். பெருந்திரளாக திரண்டிருந்த அந்த மாநாட்டில் திருத்துறைப் பூண்டி கிளை செயலாளர் தோழர் காளிதாஸ் வரவேற்புரை நிகழ்த்த உதவி மாவட்ட செயலாளர் தோழர் S.நெப்போலியன் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

மாநாட்டின் துவக்கமாக நடைபெற்ற சேவை மேம்பாட்டு கருத்தரங்கில் மாவட்ட செயலாளர் தோழர் D. சுப்பிரமணியன் மாவட்ட மூத்த பொது மேலாளர் திரு. C. வினோத் உள்ளிட்ட அதிகாரிகள் உரை நிகழ்த்த மாநில செயலாளர் தோழர் A. பாபுராதாகிருஷ்ணன் நிறைவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் தோழர் D. சுப்பிரமணியன் முன் வைத்த செயல்பாட்டு அறிக்கையும், மாவட்ட பொருளாளர் தோழர் A. ரமணன் முன் வைத்த வரவு செலவு அறிக்கையினையும் மாவட்ட மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அமைப்பு நிலை விவாதத்திற்கு பின் மாநில செயலாளர் நமது சங்கம் சாதித்த சாதனைகள், எதிர் வரும் டிசம்பர் 15 வேலை நிறுத்தம் மற்றும் அகில இந்திய மாநாடு ஆகியவற்றை விவரித்து சிறப்புரை ஆற்றினார். மாநில உதவி பொருளாளர் தோழர் R. மகேந்திரன் அமைப்பினை வலுவாகக் கட்டுவதின் அவசியம் பற்றி எடுத்துரைத்து வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் மாவட்ட தலைவராக தோழர் D.சுப்பிரமணியன், மாவட்ட செயலாளராக தோழர் A. இருதயராஜ், மாவட்ட பொருளாளராக தோழர் P.மாணிக்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களின் பணி சிறக்க தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துகிறது.

BSNL 4 G சேவை

BSNL நிறுவனம் 4 G சேவையை தருவதற்கான 700 MHz ஸ்பெக்ட்ரம் 5MHz அளவிற்கு ஒதுக்க வேண்டும் என BSNL நிறுவனம் DOTக்கு கடிதம் எழுதியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் தனியார் நிறுவனங்கள் இந்த ஸ்பெக்ட்ரத்தை வாங்க ஆர்வம் காட்டவில்லை. 700MHz ஸ்பெக்ட்ரத்திற்கு அரசு ஆதார விலையாக 11,485 கோடி ரூபாய்கள் நிர்ணயம் செய்தது மிக அதிகம் என அவர்கள் குற்றம் சாட்டினர். குறைவான டவர்கள் மூலம் அதிகப்படியான இடங்களை அடையும் தன்மை கொண்டது இந்த ஸ்பெக்ட்ரம். ஏற்கனவே BSNL நிறுவனம் ஸ்பெக்ட்ரம் வைத்துள்ளது. இத்துடன் 700 MHz ஸ்பெக்ட்ரம் கிடைத்தது என்றால் நிறுவனத்தால் 4 G சேவை வழங்க முடியும் என BSNL CMD திருஅனுபம் ஸ்ரீவாஸ்தவா தெரிவித்துள்ளார். அரசாங்கம் இந்த ஸ்பெக்ட்ரத்தை நிறுவனத்திற்கு வழங்க முடியும். அதற்கான கட்டணத்தை அரசு தனது முதலீடாக உயர்த்திக் கொள்ளலாம் எனவும் அவர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். CMDன் இந்த முயற்சியினை BSNL ஊழியர் சங்கம் வரவேற்கிறது. இந்த ஸ்பெக்ட்ரத்தை பெறுவதற்காக BSNL ஊழியர் சங்கம் இதர சங்கங்களுடன் இணைந்து அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

BSNL மருத்துவ திட்டம்

BSNL மருத்துவ திட்டம் சம்பந்தமாக மறு ஆய்வு செய்து முடிவு எடுக்கக் கூட்டு கமிட்டி ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது. 7 ஆவது உறுப்பினர் சரி பார்ப்பு நடைபெற்று பல மாதங்கள் முடிந்த பின்னும் அந்தக் கூட்டு கமிட்டி நடைபெறாமல் இருக்கின்றது. அதை உடனடியாக கூட்டுமாறு அவர்களை நமது பொதுச் செயலர் தோழர் P. அபிமன்யு அவர்களும் துணைப்பொதுச் செயலர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்களும் GM (Admn) அவர்களைச் சந்தித்து வலியுறுத்தினர். அதனடிப்படையில் டிசம்பர் முதல் வாரம் கூட்டம் நடைபெற உள்ளது.

ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனையை அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தோடு பேசக்கூடாதாம் (!)

ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனையை, அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் கூட விவாதிக்கக் கூடாது என தலைமைப் பொது மேலாளர்களுக்கு வழிகாட்டி 21.10.2016 அன்று கார்ப்பரேட் அலுவலகம் ஒரு கடிதத்தை எழுதியுள்ளது. BSNL ஊழியர் சங்கம் இதனை வன்மையாக கண்டித்ததோடு, இந்தக் கடிதத்தை திரும்பப் பெற வேண்டுமென CMD BSNL ஐ வலியுறுத்தி உள்ளது. தமிழக தலைமைப் பொது மேலாளர் அலுவலகம் உள்ளிட்ட 90 சதவிகித இடங்களில் குறைந்த பட்ச கூலி EPF, ESI உள்ளிட்டவைகளை அமுலாக்க வேண்டும் என்கிற கார்ப்பரேட் அலுவலகத்தின் உத்தரவுகள் அமுலாக்கப்படுவதில்லை. இந்த இடங்களில் எல்லாம் ஒப்பந்த ஊழியர்கள் கடுமையாக சுரண்டப்படுவதோடு, அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை, ஒப்பந்ததாரர்களும், ஊழலில் திளைக்கும் சில அதிகாரிகளும் கொள்ளையடிக்கின்றனர். இதைப்பற்றி எல்லாம் ஒப்பந்த ஊழியர்கள் கேள்வி கேட்டார்கள் என்றால் அவர்கள் பணியில் இருந்து தூக்கி எறியப்படுகின்றனர். சங்கம் அமைக்க முயற்சித்தாலும் அவர்களின் கதி அதோகதி தான். ஒப்பந்த ஊழியர்களின் சட்ட பூர்வ உரிமைகளை அமுலாக்க வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் ஒரே மாதிரியான கடிதங்களை எழுதி வருகிறது. ஆனால் தலமட்டங்களில் அவற்றை முறையாக அமுலாக்குவதை உறுதி செய்ய உருப்படியான நடவடிக்கை இல்லை. ஒப்பந்த ஊழியர்களை சுரண்டுவது தொடரும் வரை அவர்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் என்றும் முன்னணியில் இருக்கும். இது போன்ற கடிதங்களை எழுதுவதைக் கைவிட்டு பிரச்சனைகளை தீர்வு காண நிர்வாகம் தயாராகட்டும். ஊழல் அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் BSNL நிறுவனத்தின் கோடிக்கணக்கான பணத்தினைக் கொள்ளை அடிப்பதை கண்ணை மூடி வேடிக்கை பார்க்க முடியாது.

அனைத்திந்திய மாநாட்டு சிறப்பு கருத்தரங்கங்கள்

BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அகில இந்திய மாநாட்டினை ஒட்டி டிசம்பர் 8ஆம் தேதியன்று அனைத்து கிளைகளிலும் BSNL ஊழியர் சங்கத்தின் 8 கொடிகளை விமரிசையாக அலங்கரித்து, கொடியேற்றி தோழர் K.G. போஸ் நினைவு நாளாக கொண்டாடிட வேண்டும்.

டிசம்பர் 8 மற்றும் 9ஆம் தேதிகளில் தமிழகத்தின் 9 மையங்களில் சிறப்பாக கருத்தரங்கம் நடத்துவது என மாநில சங்கம் முடிவெடுத்துள்ளது. அதில் கீழ்கண்ட தோழர்கள் பங்கேற்க உள்ளனர். மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அருகாமையிலுள்ள இடங்களில் பங்கேற்க வேண்டும்.

எண்	இடம்	பங்கேற்போர்
1	கோவை	தோழர் P.இந்திரா ACS . & தோழர் K.சாமுவேல்ராஜ் தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணி
2	பாண்டிச்சேரி	தோழர் S. செல்லப்பா AGS & தோழர் மதுக்கூர் ராமலிங்கம் தமுஎகச
3	கடலூர்	தோழர் S.செல்லப்பா AGS & தோழர் மதுக்கூர் ராமலிங்கம் தமுஎகச
4	சேலம்	தோழர் A. பாபு ராதாகிருஷ்ணன் CS & தோழர் R.கருமலையான்,CITU
5	மதுரை	தோழர் M. முருகையாAGS & தோழர் K. சுவாமிநாதன் AIIEA
6	திருச்சி	தோழர் V. வெங்கட்ராமன் CVP & தோழர் M. கிரிஜா AIIEA
7	திருநெல்வேலி	தோழர் S.சுப்பிரமணியன் AGS & தோழர் S. முத்துக்கண்ணன் DYFI
8	வேலூர்	தோழர் R. மகேந்திரன் CAT & தோழர் S. கண்ணன் CITU
9	நாகர்கோவில்	தோழர் R.M. கிறிஸ்டோபர், COS & தோழர் முத்துநிலவன் தமுஎகச

Published by **S.CHELLAPPA** on behalf of BSNL EMPLOYEES UNION, TAMILNADU CIRCLE Published from RK Srinivas Flats, No.21, Bharathiyar 1st Street, Pazhavanthangal, Chennai-600 114. Kancheepuram District. and Printed by S.KARLMARX Printed at S.K.PRINTERS, No.18/17, EWS, NH1, Eladhariyan Street, Maraimalai Nagar, Chengalpattu Taluk, Kancheepuram District. Editor : **S.CHELLAPPA,** Phone : 044-2267 3931, Mobile : 94440 31715, Email : bsnleutnc@gmail.com, Website : www.bsnleutnc.com

ஒப்பந்த ஊழியரின் பணிநீக்கத்திற்கு எதிராக களம்கண்டபோது

THOLAI THODARBU THOZHAN Regd. with Registrar of Newspaper for India under No.TNTAM/2015/65855
Patrika Channel. Date of Publication : 27th of every month   Registration No.TN/CC/(S)DN/550/16-18

BSNL ஊழியர் சங்கம்

8 வது அனைத்திந்திய மாநாடு

நாள்:
2016 டிசம்பர் **31** முதல்,
2017 ஜனவரி **3** வரை

இடம்:
காமராஜர் அரங்கம்,
தேனாம்பேட்டை, சென்னை

தனியார் மயம் தடுத்திட
துணை டவர் நிறுவனம்
அமைப்பதை தடுத்திட...
மன நிறைவான
ஊதிய உடன்பாடு கண்டிட
ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகளுக்கு
தீர்வு கண்டிட
சென்னையில் சங்கமிப்போம்...
சரித்திரம் படைப்போம்...

துவக்கவுரை:

தோழர் **A.K.பத்மநாபன்**
தலைவர், CITU

பங்கேற்போர்:

திரு. **அனுபம் ஸ்ரீவாஸ்தவா**
CMD BSNL

திருமதி. **சுஜாதா ரே**
DIRECTOR(HR) BSNL

தோழர் **P.அபிமன்யு**
பொதுச் செயலாளர், BSNLEU

தோழர் **M.கிருஷ்ணன்**
பொதுச் செயலாளர், மகா சம்மேளனம்

தோழர் **V. ரமேஷ்**
பொதுச் செயலாளர், AIIEA

தோழர் **K.G.ஜெயராஜ்**
பொதுச் செயலாளர், AIBDPA

தோழர் **அனிமேஷ் மித்ரா**
பொதுச் செயலாளர், BSNLCCWF

மற்றும் **தோழமை சங்க தலைவர்கள்**

தோழமையுடன்...

T.K.ரங்கராஜன் M.P.	S.செல்லப்பா	A.பாபு ராதாகிருஷ்ணன்	K.சீனிவாசன்
தலைவர்	செயல் தலைவர்	பொதுச் செயலாளர்	பொருளாளர்

வரவேற்புக்குழு:

BSNL ஊழியர் சங்க 8 வது அகில இந்திய மாநாடு-சென்னை